ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 17.10.2016

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2016 யூலை

**பொதுநோக்கு**

வர்த்தகப் பற்றாக்குறை குறைவடைந்தமை, அதிகரித்த சுற்றுலா வருவாய்கள், நிதியியல் கணக்கிற்கான உயர்ந்த உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் காரணமாக 2016 யூலையில் வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் மேம்பட்டது. வர்த்தகப் பற்றாக்குறை யூலையில் சுருக்கமடைந்தமைக்கு இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பு காரணமாக விளங்கியதுடன், இது ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறைப்பினை விஞ்சிக்காணப்பட்டது. சுற்றுலா வருவாய்கள் அதிகரித்த வேளையில், இம்மாதகாலப்பகுதியில் தொழிலாளர் பணவலுப்பல்கள் முன்னைய ஆண்டின் தொடர்ச்சியான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன. 10ஆவது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலிருந்தான ஐ.அ.டொலர் 1500 மில்லியன் கொண்ட பெறுகைகள், கூட்டுக்கடன் வசதிகளிலிருந்தான ஐ.அ.டொலர் 300 மில்லியன், அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்ட தேறிய உட்பாய்ச்சல்கள் என்பன நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களை பலப்படுத்தியமையின் காரணமாக சென்மதி நிலுவை மீதான அழுத்தம் தளர்வடைந்தது.

**ஏற்றுமதிச் செயலாற்றம்**

2015 மாச்சிலிருந்து ஆரம்பமான ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கின் தொடர்ச்சியாக ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015 யூலையின் ஐ.அ.டொலர் 932 மில்லியனிலிருந்து 2016 யூலையில் ஐ.அ.டொலர் 891 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தாழ்ந்த பன்னாட்டு பண்ட விலைகள் மற்றும் குறைவடைந்த உள்நாட்டு நிரம்பல் என்பனவற்றின் காரணமாக குறைவடைந்த வேளாண்மை மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றம் இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தது. 2016 யூலையில் தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்

ஐ.அ.டொலர் 108 மில்லியனுக்கு 14.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, 2015 யூலையுடன் ஒப்பிடுகையில் ஈரானுக்கான ஏற்றுமதிகள் அதிகரித்த போதும் குறிப்பாக ருஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான குறைந்த கேள்வியே காரணமாக அமைந்தது. மேலும், 2016 யூலையில் வாசனைத்திரவியங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 31.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, கறுவா மற்றும் சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரியின் ஏற்றுமதிகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் கணிசமான அதிகரிப்பினைக் காட்டியபோதும் குறைந்த உள்நாட்டு நிரம்பலின் விளைவாக மிளகின் செயலாற்றம் மோசமடைந்தமையே முக்கிய காரணமாகும். மேலும், இம்மாத காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 24.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த நீர்க்கல எரிபொருளின் அளவு மற்றும் நீர்க்கல எரிபொருளின் தாழ்ந்த சராசரி விலை என்பனவற்றின் இணைந்த விளைவே காரணமாகும். 2016 யூலையில் கடல் உணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஏற்றுமதிப் பெறுமதி மற்றும் அளவு ஆகிய இரண்டு நியதிகளிலும் வீழ்ச்சியடைந்தன. எனினும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடல் உணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 19.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு 2016 யூன் இறுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்த மீன்தடை அகற்றப்பட்டமையே முக்கிய காரணமாகும். மாறாக, மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 48 சதவீதத்திற்கு வகைகூறும் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 426 மில்லியனுக்கு 3.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா, சீனா, அவுத்திரேலியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான உயர்ந்த ஆடை ஏற்றுமதிகளே காரணமாகும். மேலும், காலணி மற்றும் பயணப்பொருட்கள் துணைவகைகளில் உயர்ந்த செயலாற்றத்தினை பிரதிபலிக்கின்ற விதத்தில் தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2016 யூலையில் கணிசமாக அதிகரித்த வேளையில் பொறிகள் மற்றும் எந்திரசாதனங்கள் அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2015இன் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2016இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 5,999 மில்லியனுக்கு 5.6 சதவீதத்தினால் சுருக்கடைந்தமைக்கு போக்குவரத்து சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள் தேயிலை மற்றும் வாசனைத் திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2016 இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில் இலங்கையின் வணிக ஏற்றுமதிகளுக்கான முன்னிலைச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சேர்மனி, இந்தியா மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 53 சதவீதத்திற்கு வகை கூறின.

**அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள்**

| வகை | யூலை 2015 (ஐ.அ.டொ. மில்) | யூலை 2016 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன -யூலை 2015 (ஐ.அ.டொ. மில்) | சன -யூலை 2016 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **682.4** | **678.5** | **(0.6)** | **4,836.7** | **4,660.4** | **(3.6)** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 413.1 | 425.6 | 3.0 | 2,818.5 | 2,940.2 | 4.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 71.8 | 68.2 | (5.1) | 469.8 | 440.2 | (6.3) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 40.1 | 30.1 | (24.7) | 264.1 | 162.4 | (38.5) |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 27.1 | 29.1 | 7.4 | 177.9 | 171.6 | (3.5) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 12.6 | 19.6 | 55.5 | 84.3 | 101.2 | 20.0 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 23.7 | 18.3 | (23.0) | 205.4 | 166.6 | (18.9) |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பகுதிகள் | 4.4 | 6.1 | 39.6 | 35.1 | 42.9 | 22.2 |
| விலங்குத்தீன் | 7.4 | 4.8 | (34.6) | 45.9 | 37.9 | (17.4) |
| ஏனையவை | 82.2 | 76.7 | (6.6) | 735.6 | 597.3 | (18.8) |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **245.3** | **207.9** | **(15.2)** | **1,490.1** | **1,312.6** | **(11.9)** |
| தேயிலை | 126.5 | 107.8 | (14.8) | 809.4 | 726.1 | (10.3) |
| வாசனைத்திரவியம் | 48.5 | 33.1 | (31.8) | 219.2 | 158.4 | (27.8) |
| தேங்காய் | 34.3 | 31.8 | (7.3) | 208.5 | 206.0 | (1.2) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 14.4 | 14.9 | 3.9 | 98.6 | 71.8 | (27.2) |
| கடலுணவு | 15.1 | 14.2 | (5.8) | 100.9 | 97.7 | (3.2) |
| மரக்கறிகள் | 2.0 | 3.1 | 58.2 | 18.1 | 16.3 | (9.7) |
| ஏனையவை | 4.6 | 3.0 | (34.1) | 35.3 | 36.3 | 2.8 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **4.4** | **4.7** | **7.9** | **29.7** | **25.9** | **(12.7)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **932.1** | **891.2** | **(4.4)** | **6,356.5** | **5,998.9** | **(5.6)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

**இறக்குமதிச் செயலாற்றம்**

2016 யூலையில் இறக்குமதிகள் மீதான செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 யூலையின் ஐ.அ.டொலர் 1,534 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1433 மில்லியனுக்கு 6.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. உந்துஊர்திகள் மற்றும் அதனைத் தொடர்ந்து எரிபொருள் மற்றும் கோதுமை இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி இக்குறைப்பிற்கு பெருமளவிற்குப் பங்களித்தது. உந்துஊர்திகளின் இறக்குமதியினைக் குறைப்பதற்கு அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நுகர்வுப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தனியாள் உந்துஊர்திகள் முதலீட்டுப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சாதனங்கள் என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2016 யூலையில் முறையே 63.7 சதவீதத்தினாலும் 29.4 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. இம்மாதகாலப்பகுதியில் உந்துஊர்திகள், கலப்பு மின்னியல் ஊர்திகள், உந்துஈருளிகள், பேருந்துகள் வேளாண்மை உழுபொறிகள் மற்றும் முச்சக்கரவண்டிகள் என்பனவற்றின் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. எரிபொருள் மீதான இறக்குமதி செலவினம் இம்மாதகாலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 142 மில்லியனுக்கு 18.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு மசகெண்ணெய் மற்றும் நிலக்கரியின் சராசரி இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி அளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு என்பனவற்றுடன் சேர்த்துக்கொண்டமையே முக்கிய காரணமாகும். பன்னாட்டுச் சந்தையில் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்துசெல்லும் விதத்தில், மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை முன்னைய மாதத்தில் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 50.95 மற்றும் 2015 யூலையின் பீப்பாய் ஒன்றின் ஐ.அ.டொலர் 60.49 இலிருந்தும் 2016 யூலையில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 46.10இற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், 2016 யூலையில் கோதுமை மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 70.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதி அளவிலும் கோதுமையின் விலையிலும் பதிவு செய்யப்பட்ட குறைப்புக்களே முக்கிய காரணமாகும். மேலும், இரசாயன உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், வேளாண்மை உள்ளீடுகள், காய்கறிகள், பண்ணை உற்பத்திகள், மற்றும் அரிசி என்பன இம்மாதகாலப்பகுதியில் ஒட்டுமொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பிற்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தன. எனினும், பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றும் கட்டிட மூலப்பொருட்கள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் 2016 யூலையில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 25.4 சதவீதத்தினாலும் 14.4 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து, பெரும்பாலும் அனைத்து துணைத்துறைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தது. மேலும், 2016 யூலையில் கனிப்பொருள் உற்பத்திகளின் இறக்குமதி மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 125.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு சிமெந்து சூளைக்கற்களில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த இறக்குமதிகளே காரணமாகும். மேலும், இம்மாதகாலப்பகுதியில் தங்கத்தின் இறக்குமதி குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உயர்ந்தஅளவு தங்கம் இறக்குமதி செய்யப்பட்டமையே காரணமாகும். அதேவேளை, 2016 யூலையில் மருந்து மற்றும் மருந்தாக்கள் உற்பத்திகள், வீட்டு உபயோகப்பொருட்கள், ஒப்பனைப்பொருட்கள் மற்றும் குளியலறைப்பொருட்கள், ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள் என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் 2016 யூலையில் அதிகரித்தது.

ஒன்று சேர்ந்த அடிப்படையில், 2016இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில், இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 10,754 மில்லியனுக்கு 2.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு எரிபொருள், ஊர்திகள் மற்றும் அரிசி என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்ட குறைப்புக்களே முக்கிய


காரணமாகும். 2016இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் முக்கிய இறக்குமதி நாடுகளாக சீனா, இந்தியா, சிங்கபூர், யப்பான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பன விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 57 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம்**

| வகை | யூலை 2015 (ஐ.அ.டொ. மில்) | யூலை 2016 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன -யூலை 2015 (ஐ.அ.டொ. மில்) | சன -யூலை 2016 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **414.7** | **323.4** | **(22.0)** | **2,722.1** | **2,431.1** | **(10.7)** |
| உணவு மற்றும் குடிபானங்ககள் | 132.7 | 120.8 | (9.0) | 1,003.3 | 896.5 | (10.6) |
| மரக்கறிகள் | 34.0 | 29.7 | (12.6) | 237.7 | 228.1 | (4.0) |
| பால் உற்பத்திகள் | 23.4 | 19.5 | (16.5) | 145.8 | 139.0 | (4.7) |
| வாசனைத்திரவியம் | 8.8 | 9.8 | 11.6 | 64.4 | 76.7 | 19.1 |
| எண்ணெய் மற்றும் கொழுப்பு | 3.5 | 3.6 | 2.2 | 21.2 | 20.8 | (1.8) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 63.0 | 58.2 | (7.6) | 534.3 | 431.9 | (19.2) |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 282.0 | 202.6 | (28.2) | 1,718.8 | 1,534.6 | (10.7) |
| ஊர்திகள் | 147.9 | 53.6 | (63.7) | 744.4 | 472.9 | (36.5) |
| மருந்து மற்றும் மருந்தாக்கள் பொருட்கள் | 39.3 | 45.4 | 15.4 | 267.9 | 309.7 | 15.6 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 94.8 | 103.6 | 9.3 | 706.6 | 752.0 | 6.4 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **752.0** | **704.7** | **(6.3)** | **5,703.9** | **5,485.1** | **(3.8)** |
| எரிபொருள் | 174.8 | 142.3 | (18.6) | 1,648.2 | 1,320.2 | (19.9) |
| இரசாயனப் பொருட்கள் | 79.0 | 65.7 | (16.8) | 501.8 | 501.6 | (0.0) |
| கனிய உற்பத்திகள் | 20.4 | 46.0 | 125.4 | 126.0 | 128.2 | 1.7 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 10.1 | 32.5 | 222.9 | 127.4 | 245.5 | 92.7 |
| அடிப்படை உலோகம் | 33.3 | 25.0 | (24.9) | 277.9 | 215.2 | (22.6) |
| கோதுமை மற்றும் சோளம் | 25.1 | 8.3 | (66.9) | 200.0 | 141.4 | (29.3) |
| ஏனையவை | 409.3 | 384.8 | (6.0) | 2,822.7 | 2,933.1 | 3.9 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **365.8** | **403.1** | **10.2** | **2,643.6** | **2,829.9** | **7.0** |
| பொறி மற்றும் கருவிகள் | 179.1 | 224.7 | 25.4 | 1,321.8 | 1,596.5 | 20.8 |
| கட்டடப் பொருட்கள் | 105.7 | 120.9 | 14.4 | 723.2 | 881.6 | 21.9 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 80.8 | 57.0 | (29.4) | 595.8 | 347.9 | (41.6) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.2 | 0.6 | 153.6 | 2.7 | 3.8 | 40.9 |
| **4. வகைப்படுத்தப்படாதவை** | **1.4** | **1.6** | **11.4** | **11.0** | **7.7** | **(29.5)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,533.9** | **1,432.8** | **(6.6)** | **11,080.6** | **10,753.8** | **(2.9)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கைச் சுங்கம்,

**வர்த்தக மீதி**

2016 யூலையில் வர்த்தகப்பற்றாக்குறை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 542 மில்லியனுக்கு 10.0 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதியில் மிகக் கூடியளவு குறைப்பு ஏற்பட்டமையே காரணமாகும். எனினும், 2016இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வர்த்தகப்பற்றாக்குறை 2015இன் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,734 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 4,755 மில்லியனுக்கு அதிகரித்தது.

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2016 யூலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 209,351 இனைப் பதிவு செய்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 19.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதன்படி 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் சுற்றுலா வருகைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1,173,618இற்கு 16.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2016 யூலையில் சுற்றுலா வருகைகளின் முதல் ஐந்து மூலங்களாக சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், சேர்மனி மற்றும் பிரான்சு என்பன விளங்கி இம்மாதகாலத்தின் மொத்த வருகையில் ஏறத்தாழ 49.8 சதவீதத்திற்கு வகைகூறின. 2016இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான[1] ஒன்று சேர்ந்த வருவாய்கள் 2015இன் இதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,667.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,945.2 மில்லியன்களுக்கு அதிகரித்தன.

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2016ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

2016 யூலையில் தொழிலாளர் பணவலுப்பல்கள் 2015 யூலையின் ஐ.அ.டொலர் 599.3 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 572.8 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.4 சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. தொழிலாளர் பணவலுப்பல்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்திய கிழக்கு நாடுகளில் காணப்படும் பொருளாதார தேக்க நிலமையும் தேர்ச்சியற்ற வகைகளின் கீழான தாழ்ந்த புலம்பெயர்வுமே முக்கிய காரணங்களாக இருக்கமுடியும். எனினும், தொழிலாளர் பணவலுப்பல்களிலிருந்தான ஒன்றுசேர்ந்த உட்பாய்ச்சல்கள் 2015இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,185.9 மில்லியனுக்கு 3.8 சதவீதத்தினால் அதிகரித்தன.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

இலங்கை ஐ.அ.டொலர் 500 மில்லியனைக் கொண்ட (5.5 ஆண்டு முதிர்ச்சிகளுடன்) அதன் 10ஆவது முதலாவது இரட்டைத் தொகுதி நாட்டிற்கான பன்னாட்டு முறிகளையும் ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் பில்லியன் கொண்ட முறிகளையும் (10ஆண்டு முதிர்ச்சிகளுடன்) வழங்கியது. இக்கட்டளைகள் மொத்தமாக 5.5 ஆண்டுக்கான ஐ.அ.டொலர் 2.5 பில்லியன்களையும் 10 ஆண்டு தொகுதிக்கான ஐ.அ.டொலர் 3.0 பில்லியன்களையும் உள்ளடக்கியிருந்தன. 5.5 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகள் கொண்ட தொகுதிகள் இரண்டும் 6.125 சதவீதம் 7.125 சதவீதம் கொண்ட ஆரம்ப விலை வழிகாட்டல்களுக்கும் மிகக்கீழே முறையே 5.750 சதவீதம் மற்றும் 6.825 சதவீத சமபெறுமதிகளைக் கொண்ட நறுக்கு வீதத்தில் விலையிடப்பட்டிருந்தன.

2016 யூலையில் கொழும்பு பங்கு பங்குவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 10.1 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. எனினும் 2016 யூலை இறுதிவரை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் ஒன்று சேர்ந்த வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 30.8 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலை பதிவுசெய்து, இரண்டாந்தரச் சந்தைக்கான 32.2 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் முதலாந்தர சந்தைகளுக்கான ஐ.அ.டொலர் 1.4 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கியிருந்தது. 2016 ஏப்பிறல் இறுதியில் அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக அரச பிணையங்கள் சந்தை 2016 யூலையில் ஐ.அ.டொலர் 238.5 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது. எனினும், 2016இல் முதல் ஏழுமாதக் காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தைக்கான ஒன்றுசேர்ந்த வெளிநாட்டு முதலீடுகள் 2015இல் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 424.7 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 133.3 கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவு செய்தன. ஐ.அ.டொலர் 300 மில்லியன் கொண்ட கூட்டுக்கடன் வசதியிலிருந்தான பெறுகைகளுடன் நிதியியல் கணக்கு மேலும் வலுவடைந்தது. 2016இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் அரசிற்கான நீண்ட காலக்கடன்கள் 2015இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 169.9 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 22.0 மில்லியன் தேறிய வெளிப்பாயச்சலைப் பதிவு செய்தது.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2016இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில் திரண்ட சென்மதிநிலுவை 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,229.6 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 356.0 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவுசெய்தது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணி வீத அசைவுகளும்**

2016இன் இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் இரட்டைத்தொகுதி நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் மற்றும் கூட்டுக்கடன் வசதி என்பனவற்றிலிருந்தான பெறுகைகளின் காரணமாக ஐ.அ.டொலர் 6.5 பில்லியனுக்கு அதிகரித்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 4.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாக காணப்பட்டவேளையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ. டொலர் 8.9 பில்லியன்களாக விளங்கி 5.7 மாத இறக்குமதிகளுக்கு சமமானதாகக் காணப்பட்டது.

2015 யூன் இறுதியிலிருந்து 2016 ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 1.9 சதவீதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவினை பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபா, யூரோவிற்கு எதிராக 3.0 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னுக்கெதிராக 15.5 சதவீதத்தினாலும் கனடிய டொலருக்கெதிராக 6.7 சதவீதத்தினாலும் அவுத்திரேலிய டொலருக்கெதிராக 5.8 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 1.4 சதவீதத்தினாலும் தேய்வடைந்த வேளையில் ஸ்டேலிங் பவுனுக்கெதிராக 18.8 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

## அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | யூலை 2015 ஐ.அ.டொ. மில் | யூலை 2016 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - யூலை 2015 ஐ.அ.டொ. மில் | சன - யூலை 2016 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 932.1 | 891.2 | -4.4 | 6,356.5 | 5,998.9 | -5.6 |
| இறக்குமதிகள் | 1,533.9 | 1,432.8 | -6.6 | 11,080.6 | 10,753.8 | -2.9 |
| வர்த்தக மீதி (மிகை (+) குறை (-)) | -601.8 | -541.6 | -10.0 | -4,724.1 | -4,754.9 | 0.7 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 291.4(ஆ) | 347.0 | 19.1 | 1,667.1(ஆ) | 1,945.2 | 16.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 599.3 | 572.8 | -4.4 | 4,032.0 | 4,185.9(ஆ) | 3.8 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | -4.8 | 10.1 | 309.0 | 40.0 | -30.8 | -177.0 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 191.8 | 2,167.2 | 1,030.0 | 1,970.6 | 3,286.3 | 66.8 |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 83.8 | 308.4 | 267.9 | 631.3 | 909.5 | 44.1 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | 1,500.0 | - | 650.0 | 1,500.0 | 130.8 |
| கூட்டுக் கடன்கள் | - | 300.0 | - | - | 300.0 | - |
| நீண்ட காலக் கடன்கள் | 98.8 | 57.7 | -41.6 | 629.9 | 563.3 | -10.6 |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | - | - | - | 533.8 | 335.9 | -37.1 |

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.